**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 செத்தெம்பர் 01 | சுற்றறிக்கை | 2021இன் 08ஆம் இலக்கம்**

(இது 2021 செத்தெம்பர் 01 திகதியன்று விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையின் தமிழ்மொழி பெயர்ப்பாகும்)

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள்**

இலங்கையில் கொவிட்-19இன் பரவலின் புதிய தோற்றத்தினைக் கருத்தில் கொண்டு, கரிசனைக்குரிய தரப்பினர்களிடமிருந்து இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்ட கோரிக்கைகள் 2021 மே 25ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள்/ வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பது பற்றி பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டன. இதற்கமைய, தற்பொழுது காணப்படும் கொவிட்-19இன் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் 2021 மே 25ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளை கீழே குறித்துரைக்கப்பட்ட விதத்தில் நீடிக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொள்கின்றது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது கோரிக்கையின் மீது மேலதிக சலுகைகளை இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளாக வழங்கலாம்.

இச்சுற்றறிக்கையானது, வியாபாரங்கள்/ வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தற்போதைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட வங்கிகளின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன்களை உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் விதத்தில் அவர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரேவிதமான தன்மையினை இத்திட்டம் தொடர்பில் ஏற்படுத்துவதற்காக விடுக்கப்படுகிறது. இச்சுற்றறிக்கையானது சுற்றுலாத் துறைக்கான வழங்கப்பட்ட சலுகைகளை பெறுவதற்குத் தகைமையுடைய சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு ஏற்புடைத்தாகாது.

1. **2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று செயற்படும் வகையில் காணப்படும் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைத்தல்**

   (அ) உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனை 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில், வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட குறைப்பு, வியாபாரம் குறைவடைந்தமை அல்லது பெறுமதி இழந்தமை அல்லது வியாபாரம் மூடப்பட்டமை போன்றவை உட்பட, அத்தகைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து பிற்போடுதல் வேண்டும்.

   (ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களினால் கேட்டுக் கொள்ளப்பட்ட சலுகைகளை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

(இ) தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு ரூபாவில் அத்துடன்/ அல்லது வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான தற்போதுள்ள கொடுகடன் வசதிகளுக்கு மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் பிற்போடும் வசதியை வழங்குதல் வேண்டும்.

(ஈ) உரிமம்பெற்ற வங்கிகள் முன்னைய சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட திட்டங்களின் போது சேர்ந்த தொகையினையும் (அதாவது மூலதனம், வட்டி மற்றும் தொடர்பான சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட தொகை தொடர்பில் சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு பிரயோகிக்கத்தக்க வட்டி) தற்போதைய திட்டத்தின் போது சேர வேண்டிய தொகையினையும் (அதாவது மூலதனம் மற்றும் வட்டி) புதிய கடனொன்றாக ஒன்றுசேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் கீழே 1(உ)இல் குறிப்பிடப்பட்டவாறு 2021 செத்தெம்பர் 01இல் இருந்து தொடங்குகின்ற காலப்பகுதிக்கு மேலே குறிப்பிடப்பட்ட புதிய கடன்கள் மீதும் கீழே 1(ஊ) மற்றும் (எ)இல் குறிப்பிடப்பட்டவாறு மீள்கொடுப்பனவின் இணங்கப்பட்ட காலப்பகுதிக்காக தனியான கடன் தீர்ப்பனவு அட்டவணையின் அடிப்படையில் வட்டி வீதங்களை விதிக்கலாம்.

(உ) மேற்குறிப்பிட்ட பிற்போடலுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட ஏதேனும் ரூபா வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 2021 ஓகத்து 31ஆம் நாளன்று உள்ளவாறான 364 நாட்கள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 1 சதவீதத்தினைக் கூட்டிய வீதத்தினை விஞ்சாத விதத்தில் (அதாவது 5.93 சதவீதம் + 1 சதவீதம் = ஆண்டிற்கு 6.93 சதவீதம்) உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம். வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சலுகை ரீதியான வட்டி வீதமொன்றினை விதிக்கலாம். மேலும், ஏற்கனவேயுள்ள வசதியின் பிற்போடப்பட்ட மூலதனத்தொகை நீங்கலாக, எஞ்சிய மூலதனத்தின் வெளிநின்ற நிலுவைக்கான வட்டி பிற்போடப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதத்தில் தொடர்ந்தும் ஒன்றுசேரும்.

(ஊ) குத்தகை வசதிகள் உட்பட தவணைக் கடன்களைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கியும் தொடர்பான கடன்பாட்டாளரும், மேலே 1(அ)இல் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2022 யூலை 01 இலிருந்து தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதி வரையில் மேலே 1(ஈ)இல் உள்ள புதிய கடன்களைத் தீர்ப்பதற்கான மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வருதல் அவசியமாகும். கடன்பாட்டாளர் அவ்வாறு செய்ய விரும்புவாராயின், அவர் புதிய கடனின் மீள்கொடுப்பனவினை முன்கூட்டிய திகதியொன்றில் ஆரம்பித்துக் கொள்ளலாம். எவ்வாறெனினும் கடன்பாட்டாளர் ஏற்கனவேயுள்ள வசதிகளின் மீள்கொடுப்பனவினை 2022 சனவரி 01இலிருந்து ஆரம்பித்தல் வேண்டும்.

(எ) மேலே 1(ஈ)இல் குறிப்பிடப்பட்ட புதிய கடன்களைக் கடன்பாட்டாளர் 6 மாத காலப்பகுதிக்கும் அப்பால் தீர்ப்பனவு செய்வதற்கு கோரிக்கையொன்றினை விடுக்கும் விடயத்தில் கடன்பாட்டாளரும் வங்கியும் 6 மாத காலப்பகுதிக்கு அப்பாலுள்ள காலப்பகுதிக்கான சலுகை வட்டி வீதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(ஏ) உரிமம்பெற்ற வங்கிகள், பிற்போடப்பட்ட தொகையினை நேரகாலத்துடன் மீள்கொடுப்பனவு செய்ய தொடங்குவதற்கு கடன்பாட்டாளரை ஊக்குவிக்கும் பொருட்டு, நேரகாலத்துடன் மீள்கொடுப்பனவினை தொடங்குவதிலுள்ள நன்மைகளையும் மீள்கொடுப்பனவுக் காலத்தினை நீடிப்பதிலுள்ள சிக்கல்களையும் கடன்பாட்டளருக்கு விளக்குதல் வேண்டும்.

(ஐ) மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு, தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து நீண்ட காலப்பகுதியொன்றிற்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தில் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதமொன்றிற்கு இணங்கிக் கொள்ளலாம்.

(ஓ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் தொழிற்படு மூலதனம், அடகுபிடித்தல், தற்காலிக மேலதிகப் பற்று, குறுங்கால வர்த்தக நிதியிடல் வசதிகள் போன்றன உட்பட, ஆனால் இவ்வசதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத விதத்தில் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அத்தகைய செலுத்தப்பட வேண்டிய திகதிகள் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் வருமிடத்து சுழலும் கொடுகடன் வசதிகளின் செலுத்த வேண்டிய திகதிகளை நீடிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம், பிற்போடப்பட்ட தொகைக்கு மேலே 1(உ)இல் குறிப்பிடப்பட்டவாறு வட்டியை விதிக்கலாம்.

(ஓ) சலுகைக் காலத்தில் அதாவது 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் சேரவேண்டிய தொகைக்கு தண்ட வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோகூடாது.

(ஔ) உரிமம்பெற்ற வங்கிகள், தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாட்களினால் (உயர்ந்தபட்சம் 15 வேலைநாட்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய வசதிகளைப் பிற்போடாமல் அல்லது மறுசீரமைப்புச் செய்யாமல் அனுமதிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய தாமதத்திற்காக மேலதிக வட்டியையோ அல்லது வேறு ஏதேனும் விதிப்புக்களையோ அறவிடக்கூடாது.

2. **2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், 2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று உள்ளவாறான தற்போதுள்ள செயற்படாக் கடன் வசதிகளைக் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு நீண்ட காலப்பகுதிக்கு மீள்அட்டவணைப்படுத்தலாம். இவ்விடயத்தில், உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதம் உட்பட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், 2020 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து 2021 செத்தெம்பர் 01ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதங்களை, அத்தகைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் மீள்அட்டவணைப்படுத்தலுக்குப் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன என்ற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்யலாம் அல்லது விதிக்கலாம்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கொடுகடன் வசதிகளுக்கெதிராக 2021 திசெம்பர் 31 வரை அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துதல் வேண்டும். மேலும், மேற்குறிப்பிட்ட கடன்பாட்டாளர்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களை அளவுக்கதிகமாக தொடர்பு கொள்வது/ கட்டாயப்படுத்துவது அல்லது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கிரமமான சேகரிப்பு நடைமுறையொன்றின் பகுதியாக அவரிடம் விஜயம் செய்வது என்பன தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அறவிடல் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்காடல்கள் இடம்பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் கடன்பாட்டாளர் இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்துடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

3. உரிமம்பெற்ற வங்கிகள் சலுகைகளை வழங்குவது தொடர்பில் அளவுக்கதிகமான கட்டணங்களையோ அல்லது விதிப்புக்களையோ விதிக்கக்கூடாது என்பதுடன் அத்தகைய கட்டணங்கள் அல்லது விதிப்புக்கள் பற்றி கடன்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தலும் வேண்டும்.

4. உரிமம்பெற்ற வங்கிகள் ரூ.500,000 இற்குக் குறைவான பெறுமதியினைக் கொண்ட காசோலைகளுக்கான செல்லுபடியாகும் காலத்தினை 2021 ஒத்தோபர் 31 வரை நீடிக்கலாம்.

5. உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்துக் காசோலைக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் திரும்பும் காசோலைகள் மற்றும் கொடுப்பனவுகளை நிறுத்துதல் தொடர்பான விதிப்புக்களை 2021 செத்தெம்பர் 30 வரை நிறுத்துதல் வேண்டும்.

6. உரிமம்பெற்ற வங்கிகள், வெளிப்படையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான பிந்திய கொடுப்பனவுகளுக்கான கட்டணத்தினை 2021 ஒத்தோபர் 31 வரையான காலப்பகுதிக்கு நிறுத்துதல் வேண்டும்.

7. இத்திட்டத்தின் கீழ் சலுகைகளை பெறத்தகைமையுடைய கடன்பாட்டாளர்களைப் பொறுத்த வரை, இத்திட்டத்தின் கீழான சலுகைகளைக் கோருவதற்குப் பதிலாக, அவரின்/ அவளின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை அல்லது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான விருப்பத்தினை தெரிவிக்குமிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி தள்ளுபடிகளை வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய கடன்பாட்டாளர் தொடர்பில் நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினையும் குத்தகை வசதிகளின் எதிர்கால வட்டியினை அறவிடுவது உட்பட வேறு ஏதேனும் கட்டணங்களையும் விதிப்புக்களையும் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

**8. இலங்கை கொடுகடன் தகவல் பணியத்திற்கு அறிக்கையிடுதல்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிற்போடல்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது, எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகளில் எதிர்மறையான தன்மையினைப் பிரதிபலிக்கவோமாட்டாது.

**9. மீள்நிதியிடல்/ வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**

பல்வேறு மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகளை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள், தொடர்பான முகவர்களிடமிருந்து தேவையான வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**10. கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

(அ) அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இச்சுற்றறிக்கையினை 3 நாட்களுக்குள் அனைத்துக் கிளைகளுக்கும் சுற்றோட்டப்படுத்தல் வேண்டுமென்பதுடன் 7 நாட்களுக்குள் தேவையான உள்ளக வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகளை வழங்குதலும் வேண்டும்.

(ஆ) தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 செத்தெம்பர் 21 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் வழிமுறையூடாக மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு அத்துடன்/அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி உட்பட இலத்திரனியல் ஊடகங்களூடாக சலுகைகள், இறுதித் திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 செத்தெம்பர் 21இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையினை அத்தகைய கோரிக்கை தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் அனுமதிக்கலாம்.

(ஈ) கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய கொடுகடன் வசதிகளை பிற்போடுவது அல்லது மறுசீரமைப்புச் செய்வதற்கான கோரிக்கையினை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடனை மீளச்செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

(உ) உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைக்கும் அமைப்பு தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை ஒப்புதலுக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் கடன்பாட்டாளரின் சம்மதத்தினை எழுத்து மூலம்

அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பத்தினை நிராகரிப்பது தொடர்பான விடயத்தினைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சாத்தியமானளவிற்கு 14 நாட்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலமாக அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக கடன்பாட்டாளர் பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு இதனை மீளாய்வு செய்வதற்குக் கோருவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. உரிமம்பெற்ற வங்கிகள் அதே நிராகரித்தல் கடிதத்தின் மூலமாக கடன்பாட்டாளர் விரும்புமிடத்து, மீளாய்வு வசதிகளை அவராகவே பயன்படுத்திக் கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பது பற்றி விண்ணப்பதாரிக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

## 11. சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்

உரிமம்பெற்ற வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளுக்கான கணக்குகளை 2020 ஒத்தோபர் 28ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கிணங்க கணக்கீடு செய்யவேண்டும். இடர்நேர்வுகளை அதிகரிக்கின்ற கடன்பாட்டாளர்கள் அல்லது துறைகளைப் பொறுத்தவரை உரிமம்பெற்ற வங்கிகள் போதுமான பழுதுறல் கட்டணங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களையும் மற்றும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

## 12. அறிக்கையிடும் தேவைப்பாடு

உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை 2021 செத்தெம்பர் 30ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்